Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, FEBRUARY 12 2025

புதன்கிழமை 12, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 157 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



கோவேறு கழுதைகளும், சிந்து காட்டு உயர்ந்த சாதிக் குதிரைகளும், பெரிய போர் யானைகளும் பழக்கிய பின்னால் சிறந்தவைகளாம். ஆனால், புத்தர் போதனைகள் “தன்னைத் தானே அடக்கியாள்பவன் இவை அனைத்திலும் சிறந்தவன்“

### 2025ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில்

# அரச, தனியார், சம்பள அதிகரிப்பை இணைக்க அரசுக்கு யோசனை

நாட்டில் விரைவில் நடைபெறவுள்ள 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச, தனியார் மற்றும் தோட்டங்கள் என அனைத்து துறைகளைச் சேர்ந்தவர்களும் வாழ்வதற்கான போதுமான சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளுமாறு நாங்கள் அரசாங்கத்துக்கு யோசனை முன்வைத்திருக்கிறோம் என முன்னிலை சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் தமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.


மேலும், இந்த கோரிக்கையை அடைந்துகொள்ள மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என தெரிவித்து முன்னிலை சோசலிச கட்சி அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்திருக்கும் யோசனைகள் தொடர்பில் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையிலான துண்டுப்பிரசுரங்கள் புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக வழங்கப்பட்டன.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே தமிந்த நாகமுவ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2





## இன்று மின்வெட்டு இல்லை

நாடளாவிய ரீதியில் இன்று புதன்கிழமை (12) மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

பௌர்ணமி தினமான இன்று புதன்கிழமை (12) இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



### பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு

## சபாநாயகர் விடுத்துள்ள முக்கிய அறிவிப்பு

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சபாநாயகர் முக்கிய அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

இதற்கமைய அன்றைய தினம் பாராளுமன்றம் காலை 9.30 மணிக்குக் கூடவிருப்பதுடன், இதில் கலந்துகொள்ளுமாறு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## யோஷித, டெய்சி ஆச்சி மீது வழக்குப் பதிவு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான ‘டெய்சி ஆச்சி’ என்றும் அழைக்கப்படும் டெய்சி பொரெஸ்ட் ஆகியோரை கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் சந்தேக நபர்களாகப் பெயரிட்டு, பணச்சலவை சட்டத்தின் கீழ் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## கொழும்பில் விசேட போக்குவரத்து திட்டம்

கொழும்பு - 02, ஹுணுபிட்டிய - கங்காராம விகாரையின் வருடாந்த நவம் மஹா பெரஹெர காரணமாக விசேட போக்குவரத்து திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

### போதைப்பொருள் பயன்படுத்திய

## 17 பொலிஸார் பணி நீக்கம்

சட்டவிரோதமாக ஹெரோயின் மற்றும் ஐஸ் போன்ற போதைப்பொருட்களை உட்கொண்டதற்காக கடந்த நான்கு மாதங்களில் 17 அதிகாரிகளை இலங்கை பொலிஸ் பணி நீக்கம் செய்துள்ளது.

தொடர்ச்சி P2



## முகாம்களில் வாழும் குடும்பங்களுக்கு புதிய வீடுகள்

மலையகப் பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவுகளால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் குடும்பங்களுக்கு விரைவாக வீடுகள் வழங்கப்படும் என பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கென வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள், எதிர்வரும் மார்ச் முதல் வாரத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2



## வெள்ளி வரை மின்வெட்டு தொடரும்

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் பிரதான மின் கட்டமைப்போடு இணைக்கப்படும் வரை, குறைந்தபட்சம் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நாட்டின் பல மாவட்டங்களில் குறுகிய மின்வெட்டு விதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மின்சார சபை (CEB) வட்டாரங்கள் திங்கட்கிழமை (10) இரவு டெய்லி மிரருக்குத் தெரிவித்துள்ளன.

நிலக்கரி மின் நிலையத்தை விரைவில் சரிசெய்ய முயற்சிகள் நடந்து வருவதாகவும், ஆனால் வாரம் முழுவதும் மின்வெட்டு நீடிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளன.

தொடர்ச்சி P2

### குரங்கு மீது பழி சுமத்திய அனுர அரசு தற்போது

## முந்தைய அரசாங்கத்தையும் பழி சுமத்துகிறது



நாட்டில் ஏற்பட்ட மின்தடை பிரச்சினைக்கு முதலில் குரங்கு மீது பழி சுமத்திய அரசாங்கம், தற்போது முந்தைய அரசாங்கங்கள் மீது பழி சுமத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.

உண்மையான பிரச்சினை என்ன என்பதை இனங்காண அவர்கள் சிந்திக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது X தலத்தில் கூறியுள்ளதாவது,

சூரிய மின் உற்பத்தியை அதிகரிக்கத் தவறியதும், குறைந்த தேவையுள்ள காலங்களை நிர்வகிக்கத் தவறிய மோசமான நிர்வாகமும்தான் மின்தடைக்கான உண்மையான காரணம்.

தொடர்ச்சி P2



## வீதி விபத்துகளில் இதுவரை 203 பேர் பலி

இவ்வருடத்தின் ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் வீதி விபத்துக்களினால் 203 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், நெடுஞ்சாலைகளில் இடம்பெற்ற வீதி விபத்துக்களிலேயே அதிகளவானோர் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ச்சி P2



### இவ்வருடத்தின் இதுவரை

## 13 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவு

நாட்டில் இவ்வருடத்தின் (2025) இதுவரையான காலப்பகுதிக்குள் 13 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கே.புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### தையிட்டி விகாரை தொடர்பில்

## அரசு தீர்மானம் எடுக்கவில்லை

யாழ்ப்பாணம் - தையிட்டியில் அமைந்துள்ள பௌத்த விகாரை தொடர்பாக அரசாங்கத்தில் எவ்விதமான பேச்சுவார்த்தையும் இடம்பெறவில்லை என புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# அரச, தனியார், சம்பள அதிகரிப்பை இணைக்க அரசுக்கு யோசனை

அங்கு அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்துக்குப் பல யோசனைகளை முன்வைத்திருக்கிறோம். என்றாலும், அரசாங்கம் அந்த யோசனைகளைக் கருத்திற்கொண்டதாகத் தெரியவில்லை. அதனால் இது தொடர்பில் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

யுத்தத்துக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களும் கடந்த காலம் பூராகவும் மக்களுக்குத் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு பாரியளவில் பாதுகாப்பு செலவை மேற்கொண்டு வந்தது.

யுத்தம் ஒன்று இல்லாத நாட்டில் இந்தளவு பாரிய நிதியைப் பாதுகாப்புக்காக ஒதுக்குவது தேவையற்ற விடயமாகும். ஏனெனில், இந்த நாட்டில் சுகாதாரம், கல்வி தொடர்பில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் பாரியளவில் இருக்கின்றன. ஆனால், பயணம் இல்லை என தெரிவித்து அதற்குத் தேவையான ஒதுக்கீடுகளைத் தொடர்ந்து குறைத்து வருகிறது. அதிகமான வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு இருந்துவருகிறது.

அதேபோன்று, அதிகமான கிராமப்புற பாடசாலைகளில் மாணவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கூட இல்லாத அதிகமான பாடசாலைகள் இருக்கின்றன. வகுப்பறைகள் இல்லை, கழிவறைகள் இல்லை. வாசிகசாலை, விஞ்ஞான ஆய்வுக்கூடம் இல்லாத பல பாடசாலைகள் இருக்கின்றன. அதனால்தான் தேவையற்ற செலவுகளைக் குறைத்து கல்வி மற்றும் சுகாதாரத்துக்கான ஒதுக்கீடுகளை அதிகரிக்குமாறு யோசனை முன்வைத்தோம்.

கடந்த 2023ஆம் ஆண்டு இந்த நாட்டின் தனவந்த வியாபாரிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கிய நிவாரணம் 1,049 பில்லியனாகும்.

மக்கள் குடிக்கும் மருந்துப் பொருட்களுக்குப் பிள்ளைகளின் புத்தகங்களுக்கு விதிக்கப்பட்ட வற் வரி 18 வீதமாகும்போது, அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு பாரியதொரு தொகை வரி அறவிடும் நிலையிலேயே கோடிஸ்வர வியாபாரிகளுக்கு மில்லியன் கணக்கில் நிவாரணம் வழங்கினார்கள்.

எமது நாட்டுச் சாதாரண வியாபாரிகள் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக பாரிய வீழ்ச்சிக்கு ஆளானார்கள். அவர்களின் வியாபார நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டு செல்ல அவர்களால் முடியாமல் போனது. இதன் காரணமாக அவர்கள் பாரியளவில் கடன் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அதனால் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரிகள் மீண்டும் இயல்பு நிலைக்கு வரும் வரை அவர்களுக்கு நிவாரண காலம் வழங்கப்பட வேண்டும் என நாங்கள் அரசாங்கத்துக்கு யோசனை முன்வைத்திருக்கிறோம்.

மேலும், மக்கள் பெற்றுக்கொள்ளும் சம்பளம் அவர்களின் நாளாந்த தேவைகளைப் பூர்த்தியாக்கிக்கொள்ள போதுமானதாக இல்லை.

வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் பேசிவருகிறது. ஆனால், தனியார்த் துறையினருக்கு நீண்டகாலமாகச் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படவில்லை. அவர்களின் அடிப்படைச் சம்பளம் கூட மிகவும் குறைந்த அளவிலேயே இருக்கிறது. எனவே, அரச, தனியார் மற்றும் தோட்டங்கள் என அனைத்துத் துறைகளைச் சேர்ந்தவர்களும் வாழ்வதற்காக போதுமான சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளுமாறு நாங்கள் அரசாங்கத்துக்கு யோசனை முன்வைத்திருக்கிறோம்.

எனவே, அரசாங்கம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பாரிய எதிர்பார்ப்புடனே ஆட்சிக்குக் கொண்டுவந்திருக்கிறது. மக்களின் இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் தார்மிக பொறுப்பு இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது. என்றாலும் அதனை இந்த முதலாவது சந்தர்ப்பத்திலேயே தீவிர மறுசீரமைப்புக்குச் சென்றால் மாத்திரமே அதனைச் செய்ய முடியும். அதற்காக மக்களும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் இந்த வரவு - செலவு திட்டத்திலும் மக்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை. அதனால் மக்கள் தங்களின் கோரிக்கைகளை வெற்றிகொள்வதற்கு ஒன்றுபடுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றார்.



## இன்று மின்வெட்டு இல்லை

நாடளாவிய ரீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (09) ஏற்பட்ட திடீர் மின்வெட்டு காரணமாக நுரைச்சோலை நிலக்கரி மின்னுற்பத்தி நிலையத்தில் செயலிழந்த மூன்று மின்னுற்பத்தி இயந்திரங்களையும் மீண்டும் மின்னுற்பத்தி கட்டமைப்பில் இணைப்பதற்குப் பல பகுதிகளில் மின்வெட்டை அமுல்படுத்த இலங்கை மின்சாரசபை தீர்மானித்திருந்தது.

அதன்படி, நாட்டில் பல பகுதிகளில் திங்கட்கிழமை (10) மற்றும் செவ்வாய்க்கிழமை (11) அன்றும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## சபாநாயகர் விடுத்துள்ள முக்கிய அறிவிப்பு

மேலும், அன்றைய தினம், உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்மானம் சபாநாயகரினால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படவுள்ளது.

அத்துடன், அந்த சட்டமூலத்தை ஆராயும் நோக்கில் சம்பந்தப்பட்ட அமைச்சுசார் ஆலோசனைக் குழுவும் அன்றைய தினமே (14) கூடவுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரியவின் கோரிக்கைக்கு அமையப் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 16க்கு அமைய எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசேட பாராளுமன்ற அமர்வு நடைபெறவுள்ளது.

பாராளுமன்றத்தின் இந்த விசேட அமர்வானது சபாநாயகரால் திங்கட்கிழமை (10) பிரசுரிக்கப்பட்ட 2423/04ஆம் இலக்க விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முகாம்களில் வாழும் குடும்பங்களுக்கு புதிய வீடுகள்

பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சில் திங்கட்கிழமை (10) அமைச்சின் செயலாளர்கள் மற்றும் முப்படை அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலிலே அமைச்சர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

கேகாலை மாவட்டத்தில் 22 குடும்பங்கள் மண்சரிவு காரணமாக அகதி முகாம்களில் தங்கியுள்ளன.

பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்லைப் பகுதியில் 51 குடும்பங்கள் தமது பிள்ளைகளுடன் ஐந்து ஆண்டுகளாக கபரகலையில் மூடப்பட்ட தேயிலை தொழிற்சாலையில் வசித்து வருகின்றனர்.

இந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படும். இதற்கான கட்டுமானப்பணிகள் பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சின் செலவில் மேற்கொள்ளப்படும் என்றார்.

## வெள்ளி வரை மின்வெட்டு தொடரும்

செவ்வாய்க்கிழமை (11) நாட்டின் பல மாவட்டங்களில் ஒரு மணி நேரம் 30 நிமிட மின்வெட்டு அமல்படுத்தப்படுவதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

ஆனால், நுரைச்சோலை மின் நிலையத்தில் பழுதுபார்க்கும் பணிகள் முன்னேறும்போது, இந்த நேரங்கள் குறையும். இருப்பினும், மின்சார நிலையத்தை மீண்டும் மின் கட்டமைப்போடு இணைக்கக் குறைந்தது ஐந்து நாட்கள் ஆகும் என்று மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஞாயிற்றுக்கிழமை (09) நாடு முழுதும் ஏற்பட்ட மின்தடைக்கான காரணத்தை விரைவில் அறிக்கையளிக்குமாறு எரிசக்தி அமைச்சு கேட்டுக்கொண்டதையடுத்து அது குறித்த விசாரணைகள் நடந்து வருகின்றன.

பாணந்துறை மின் நிலையத்தில் மின் இணைப்பு கம்பியில் மோதியதாக ஒரு குரங்கு மோதியதால் மின் தடை ஏற்பட்டதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி குற்றம் சாட்டினார். திங்கட்கிழமை (10) காலை அந்த இடத்திற்கு அருகில் ஒரு குரங்கின் சடலம் கண்டெடுக்கப்பட்டபோது இந்தக் கூற்று மேலும் வலுப்பெற்றது.

இருப்பினும், தேசிய மின் கட்டமைப்புக்கு அவசர புதுப்பிப்பு தேவை என்று பொறியாளர்கள் கூறியுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை(09) மின் தடை ஏற்பட்டதிலிருந்து, குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகளைப் பற்றி விவாதிக்க அரசாங்கத்திலும் CEBயிலும் அவசரக் கூட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

முழு அமைப்பையும் கூடுதல் அனல் மின் நிலையங்கள் மற்றும் நீர் மின் நிலையங்கள், வலுவான மின் கட்டமைப்புடன் மேம்படுத்த அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், நாடு முழுவதும் மின்வெட்டு அடிக்கடி நிகழும் என்றும் நாட்டை இருளில் ஆழ்த்தும் என்றும் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.



## யோஷித, டெய்சி ஆச்சி மீது வழக்குப் பதிவு

யோஷித ராஜபக்ஷவின் வங்கிக் கணக்கில் 59 மில்லியன் ரூபாய்க்கு மேல் பணம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 2016ஆம் ஆண்டு அவர் மீதான விசாரணை தொடங்கப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் எஸ்.எஸ்.பி. புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

பணம் எவ்வாறு வைப்பிலிடப்பட்டது என்பதற்கான நியாயமான விளக்கத்தை யோஷித வழங்கத் தவறிவிட்டார் என்று அவர் கூறியுள்ளார்.

மேலும் விசாரணைகளில், கேள்விக்குரிய கணக்கு டெய்சி பொரெஸ்டுடன் இணைந்து நடத்தப்பட்டது தெரியவந்துள்ளது.

இதன் விளைவாக, யோஷிதவுடன் டெய்சியையும் வழக்கில் சந்தேக நபராக சேர்க்குமாறு சட்டமா அதிபர் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார். டெய்சிக்கு ஏற்கெனவே வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட அனைத்து சந்தேக நபர்கள் மீதும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என்றும் எஸ்எஸ்பி மனதுங்க கூறியுள்ளார்.

## கொழும்பில் விசேட போக்குவரத்து திட்டம்

விகாரையின் வருடாந்த நவம் மகா பெரஹெர செவ்வாய்க்கிழமை (11) மற்றும் இன்று புதன்கிழமை (12) இரவு 7.30 மணி முதல் 10.30 மணி வரை வீதி உலா வர உள்ள நிலையில் இந்த விசேட போக்குவரத்து திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

விகாரையில் பெரஹெர ஆரம்பமாகி, ஜினரத்தன மாவத்தை வழியாகச் சென்று, ஹுணுபிட்டிய வெவ வீதிக்குத் திரும்பி, ராமநாயக்க மாவத்தை சந்திக்கு வந்து, ராமநாயக்க மாவத்தை வழியாக ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை சந்தி வரை பயணித்து, ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை ஊடாக அல்ட்ரயார் அவென்யூ சந்திப்பில் வலதுபுறம் திரும்பி, அல்ட்ரயார் அவென்யூ வழியாக ஸ்டேபிள் தெரு சந்தி வரை பயணித்து, வலதுபுறம் திரும்பி ஸ்டேபிள் தெரு, பேப்ரூக் பிளேஸ், பேப்ரூக் சுற்று வட்டம், ஜினரத்தன மாவத்தை வழியாக கங்காராம விகாரையை வந்தடையவுள்ளது.

இதன் காரணமாகக் குறித்த காலப்பகுதியில் மேற்படி வீதிகளை பயன்படுத்தும் சாரதிகள் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

## 17 பொலிஸார் பணிநீக்கம்

இலங்கை பொலிஸ் பிரிவில் போதைப்பொருள் பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் அதிகாரிகளின் பட்டியலை புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு தொகுத்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் எஸ்எஸ்பி புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

குறித்த அதிகாரிகள் பரிசோதிக்கப்பட்டு மருத்துவ அறிக்கைகள் தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு சபைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அதன் முடிவுகளைத் தொடர்ந்து, அதிகாரிகள் பொலிஸ் திணைக்களத்திலிருந்து படையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோன்ற குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் பல அதிகாரிகள் மீது விசாரணைகள் நடந்து வருவதாகவும், அவர்களின் மருத்துவ பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எஸ்எஸ்பி மனதுங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த விவகாரத்தில் தொடர்புடைய மூத்த அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

## வீதி விபத்துகளில் இதுவரை 203 பேர் பலி

2024ஆம் ஆண்டில், கவனக்குறைவாக வாகனம் செலுத்தியமையால் 1,585 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ள நிலையில் 1,667 பேர் உயிரிழந்துள்ளனர்.

2025 ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் ஏற்பட்ட வீதி விபத்துக்களில் 514 பேர் படுகாயமடைந்துள்ளதுடன், 880 பேர் சிறு காயமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## முந்தைய அரசாங்கத்தையும் பழி சுமத்துகிறது

மின்தடை தொடர்பிலான உண்மை நிலையை இது போன்ற தவறான தகவல்கள்மூலம் மறைக்க முடியாது.

மின் துறையில் சீர்திருத்தங்கள்மூலம் மட்டுமே அதை நிவர்த்தி செய்ய முடியும்.அத்தகைய அமைப்பில் மாற்றம் மற்றும் வெளிப்படைத்தன்மை மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

## அரசு தீர்மானம் எடுக்கவில்லை

தனியாருக்குச் சொந்தமான காணியில் அமைந்துள்ளதாகக் கூறப்படும் விகாரையை அகற்ற வலியுறுத்திப் செவ்வாய்க்கிழமை(11) முதல் அங்குப் பாரிய போராட்டம் ஒன்றுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விகாரையை அகற்ற முடியாது எனவும், மாறாக விகாரைக் காணியின் உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும் எனவும் புத்த சாசன அமைச்சர் கூறியதாகப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இது தொடர்பாக அமைச்சர் கூறியதாவது, அதனை நிராகரித்த அவர், அண்மையில் யாழ்ப்பாணம் சென்ற போது தன்மிடம் இந்த விடயத்தைப் பற்றிக் கூறியிருந்தார்கள்.

இதுவொரு பாரதூரமான விடயம் என்பதால், சகல தரப்பினரையும் இணைத்துக் கலந்துரையாட வேண்டும் என தீர்மானித்திருந்த போதிலும் அரசாங்க மட்டத்தில் எந்தவித கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை என அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

## 13 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவு

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பாதாள உலக கும்பல்களின் தலைமையில் 07 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது.

ஏனையவை தனிப்பட்ட தகராறு காரணமாக இடம்பெற்றுள்ளது.

பாதாள உலக கும்பல்களின் தலைமையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 09 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

03 T -56 ரக துப்பாக்கிகள் மற்றும் 05 கைத்துப்பாக்கிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் 04 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.


# ஜப்பான் தூதுவர் கிளிநொச்சிக்கு விஜயம்

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜப்பானியத் தூதுவர் அகியோ இசோமடா (Akio Isomata) தூதரக அதிகாரிகள் புதன்கிழமை (11) காலை பளை மற்றும் முகமாலை பகுதிக்குச் சென்று கண்ணிவெடி அகற்றும் நிறுவவனப்பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதுடன் கண்ணிவெடி அகற்றும் பணிகளையும் பார்வையிட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் வெடிபொருட்கள் மிக ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும் இந்தப் பகுதியில் மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் வெடிபொருட்களில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளதாகவும் கண்ணிவெடி அகற்றும் நிறுவன பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், பளை மற்றும் முகமாலைப் பகுதியில் ஜப்பான் நிதி பங்களிப்புடன் டாஸ், கலோரெஸ்ட் மற்றும் சாப் நிறுவனத்தினால் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.










### தையிட்டி விகாரை விவகாரம்:

# யாழ். மக்களோடு கலந்துரையாடி தீர்வு காண்போம்

யாழ். தையிட்டி விகாரையின் காணி தொடர்பில் யாழ்ப்பாண மக்களின் விருப்பத்தை முதலில் கவனத்திற் கொள்ள வேண்டுமென கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தையிட்டி விகாரைக் காணி தொடர்பில் காணி உரிமையாளர்கள் செவ்வாய்க்கிழமை (11) ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிட்டபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது குறித்து அமைச்சர் தெரிவிக்கையில்,

தையிட்டியில் விகாரை கட்டி முடிக்கப்பட்டு மத வழிபாடுகளும் இடம்பெற்று வருகின்றன. இதைக் கட்டும்போது எதுவும் பேசாதவர்கள், இதைப் பற்றி இன்று பேசுவது புரியாத புதிராகவுள்ளது. எதிர்வரும் காலங்களில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதில் பேசுவதற்கு இவர்களுக்கு எதுவும் இல்லை. இதனால்தான், இவ்விடயத்தைத் தூக்கிப் பிடித்துள்ளனர்.

இனவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ள இன்றைய சூழலில் சிலர், மீண்டும் அரசியலுக்காகப் பேச முன் வந்துள்ளனர்.

இந்த விகாரை கட்டி முடிக்கப்படும் வரைக்கும் இங்கிருந்தோர் எதையும் பேசவில்லை.

மக்களின் விருப்பத்தையறிந்து அன்றிருந்தவர்கள் செயற்படாதது ஏன்?

இப்பிரச்சினைக்கு மக்களோடு கலந்துரையாடி



தீர்வு காண்போம்.

விகாரை கட்டப்பட்டுள்ள இடம் மக்களுடையது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இவர்களுக்கு நட்டஈடு அல்லது காணிகளை வழங்க வேண்டிய தேவை உள்ளது.

விகாரையை உடைத்து நொறுக்கி விட முடியுமா? என்பதும் கேள்விக்குறியாக உள்ளது.

உடைத்து நொறுக்குவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு வருமா?

இது பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எவ்வாறாயினும், இதற்கு சுமுகமான தீர்வை காண்பது அவசியம்.

அரசியல் ரீதியாகத் தோல்வியுற்றோர் ஐக்கியப்பட்டுள்ள மக்களைப் பிரிக்கப் பார்க்கின்றனர். எவராலும் மக்களைப் பிரிக்க இயலாது என்றும் கூறியுள்ளார்.

## டான் பிரியசாத் கைது



துபாயில் இருந்து இலங்கைக்கு வந்த டான் பிரியசாத், செவ்வாய்க்கிழமை (11) அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

வெல்லம்பிட்டி, மீதொட்டமுல்ல வீதியை சேர்ந்த 39 வயதுடைய லியனகே அபேரத்ன சுரேஷ் பிரியசாத் என்ற குறித்த நபர் தனது மனைவி மற்றும் மூன்று குழந்தைகளுடன் இலங்கைக்கு வந்துள்ளதுடன் கல்கமுவ நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு தொடர்பாக அவருக்கு விதிக்கப்பட்ட விமானப் பயணத் தடையின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் தற்போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கடைத்தொகுதியில் இருந்து இளைஞனின் சடலம் மீட்பு

க.அகரன்



வவுனியா பசார் வீதியில் அமைந்துள்ள கடைத்தொகுதியில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் புதன்கிழமை (11) காலை மீட்கப்பட்டுள்ளது.

சாந்தசோலை பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய சுப்பையா ஆனந்தன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பசார் வீதியில் அமைந்துள்ள நகை பட்டறை ஒன்றில் தொழில் புரிந்து வரும் குடும்பஸ்தர் செவ்வாய்க்கிழமை (10) இரவு வீட்டிலிருந்து தொழில் நிமித்தம் கடைக்குச் சென்றுள்ள நிலையில், அவரது சடலம் பட்டறை அமைந்துள்ள மாடிக் கட்டிடத்தின் கீழ்த் தளத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த நபர் மாடிக்கட்டடத்தில் இருந்து தவறி விழுந்ததால் மரணமடைந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றதுடன் சம்பவம் தொடர்பாக தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கொட்டகலையில் மகா யாகம்


வி.ரி.சகாதேவராஜா

நுவரெலியா மாவட்டம் கொட்டகலையில் இராமகிருஷ்ண ஆலய மகா கும்பாபிஷேகம் மற்றும் சிவானந்தா நலன்புரி நிலையம் திறப்பு விழாவை முன்னிட்டு திங்கட்கிழமை (10) காலை மகா யாகம் நடைபெற்றுள்ளது.

இ.கி.மிஷன் சுவாமிகள் அதை நிறைவேற்றி வைத்துள்ளதுடன்,

சுவாமிகள் மற்றும் ஏனைய பஜனைக் குழுவினரது பஜனைகளும் இதன்போது நடைபெற்றுள்ளது.



## சந்தோஷ் ஜாவுடன் இ.தொ.காவினர் சந்திப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் திங்கட்கிழமை (10) அன்று சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளரும், நிதிச் செயலாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

குறிப்பாக இச் சந்திப்பின் போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் இருதரப்பினர்களுக்கும் இடையில் கலந்துரையாடப்பட்டது.

அதாவது, மலையக மக்களுக்கான காணி உரிமை தொடர்பிலும், இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளுக்கான காணி உரித்தினை பெற்றுக் கொடுப்பது தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

மேலும், இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் மலையக பெருந்தோட்ட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கல்வி மேம்பாட்டுத் திட்டத்தினை (வித்தியாவர்தன) வழங்கி எமது ஆசிரியர்களுக்கான அறிவியல், தொழில்நுட்பம், ஆங்கிலம், கணிதம் (STEM) ஆகிய துறைகளில் புலமையை அதிகரித்துக் கொள்வதற்காக உதவி வழங்கியமைக்கு இந்திய அரசாங்கத்திற்கு நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார்கள்.

அதேபோல், இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 3 பில்லியன் ரூபாய் நிதி உதவியிற்கான அபிவிருத்தி முன்மொழிவுகளை தற்போதைய அரசாங்கத்தினூடாக மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

# வீதி விபத்தில் வயோதிபப் பெண் மரணம்

காலி - மாத்தறை பிரதான வீதி ஹபராதுவ, மிஹிரிபென்ன பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் திங்கட்கிழமை (10) மாலை இடம்பெற்றுள்ளது.

மிஹிரிபென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீதியில் பயணித்த குறித்த வயோதிபப் பெண் மீது காலியில் இருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த வயோதிபப் பெண், கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபராதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையில் பாவனைக்கு உதவாத உணவுகள் விற்பனை



எம்.எஸ்.எம்.ஹனீபா

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சம்மாந்துறையில் அமைந்துள்ள விஞ்ஞான பீடத்திலுள்ள சிற்றுண்டிச்சாலையில் சுகாதார நடைமுறைகளைத் தொடர்ச்சியாக பின்பற்றாமல் பாவனைக்கு உதவாத உணவுகளை விற்பனை செய்த அதன் உரிமையாளருக்கு சம்மாந்துறை நீதவான் நீதிமன்றினால் 20 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிற்றுண்டிச்சாலை தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எம்.எம்.நௌசாத் தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழு பரிசோதனை மேற்கொண்டு மூன்று தடவைகள் எச்சரிக்கை விடுக்கப்பட்டு, திருத்த வழிமுறைகள் வழங்கப்பட்ட போதிலும், அவற்றை பின்பற்றாத காரணத்தால் சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தால் சிற்றுண்டிச்சாலை உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.கரு ணாகரன் முன்னிலையில் திங்கட்கிழமை (10) அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, 20 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டு, எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவகங்கள், உணவு கையாலும் நிலையங்கள், பேக்கரிகள், போன்றவை பொதுச் சுகாதார பரிசோதகர்களால் தொடர்ச்சியாகப் பரிசோதிக்கப்பட்டு உணவுப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிலிண்டர் வெடித்ததில் இருவருக்கு காயம்

எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் கதிர்காமம் கடற்படை விடுதியில் தங்கியிருந்த இருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த எரிவாயு சிலிண்டர் செவ்வாய்க்கிழமை (11) காலை 8.30 மணியளவில் வெடித்துள்ளது.

மாத்தறை, கெக்கனதுர பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய பெண்ணும் 36 வயதுடைய ஆணும் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் காயமடைந்துள்ளனர்.

காலை உணவைத் தயாரித்துக் கொண்டிருந்த போது எரிவாயு சிலிண்டர் வெடித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். காயமடைந்தவர்கள் கதிர்காமம் பிராந்திய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திஸ்ஸமஹாராம மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# தேங்காய் திருடும் குரங்குகள் நாட்டையே இருளாக்கின

நமது நாடு மின்வெட்டு அல்லது மின்வெட்டுகளால் பாதிக்கப்பட்ட ஒரு ஆசிய நாடு என்பதை நாம் நினைவூட்ட வேண்டியதில்லை. நாட்டிற்கு அதிகாரப்பூர்வ மின்சாரம் வழங்கும் இலங்கை மின்சார சபைக்குள் பரவலான உட்பூசல்கள் உள்ளன.

நாட்டில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையிலும் நாளொன்றுக்கு ஒன்றரை மணிநேரம் மின்வெட்டு அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. இது, பாரிய பிரச்சினைகளுக்கு வழிசமைக்கும். எதிர்கால மின்சாரப் பாதுகாப்பு குறித்துப் பல முக்கியமான நடவடிக்கைகளை மிகுந்த கவனத்துடனும் பரிசீலனையுடனும் எடுப்பதும் அவசியம்.

போதுமான மின்சார உற்பத்தி மற்றும் அதன் நிதி நிலைமை தொடர்பாக இலங்கை மின்சார சபை சிறிது காலமாக கடுமையான நெருக்கடியில் சிக்கியுள்ளது.

1996இல் நாடு அதன் மிக மோசமான மின்சார நெருக்கடியைச் சந்தித்தது. இதன் விளைவாக, முந்தைய இரண்டு ஆண்டுகளில் காணப்பட்ட 5.5 சதவீத வளர்ச்சி வீதத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 3.8 சதவீதமாகக் குறைந்தது.

2001 கடுமையான வறட்சிக்குப் பிறகு நாடு மீண்டும் மின்சார நெருக்கடியை எதிர்கொண்டது. அந்த நெருக்கடியின் அளவு 1996 நெருக்கடியைப் போலவே இருந்தது, ஆரம்பத்தில் ஒன்றரை மணி நேர மின்வெட்டு ஒரு நாளைக்கு ஏழு மணி நேரம் வரை நீட்டிக்கப்பட்டது.

வறண்ட வானிலை மற்றும் குறைந்த மின்சார உற்பத்தி காரணமாக அதிகரித்த மின்சார தேவையைப் பூர்த்தி செய்யத் தவறியதால், தண்ணீரைச் சேமிக்கும் முயற்சியில், நாடு முழுவதும் மணிநேர மின்வெட்டு விதிக்கப்பட்டது. 2020இல் இலங்கையும் தொடர்ச்சியான மின்வெட்டுகளை எதிர்கொண்டது, மேலும் நாடு சுதந்திரத்திற்குப் பிறகு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்த நேரத்தில், இலங்கையர்கள் ஒரு நாளைக்கு 10 மணி நேரத்திற்கும் மேலாக மின்வெட்டுகளைச் சந்தித்தனர்.

நாடு இப்போது மின்வெட்டுக்குப் பழக்கமாகி விட்டாலும், நாடு முழுவதும் எதிர்பாராத விதமாக ஐந்து மணி நேரம் மின்சாரத்தை ஞாயிற்றுக்கிழமை (09) இழந்தது, பின்னர் பல மணி நேரம் மின்சாரத்தை இழந்தது. இதுவரை பாதிக்கப்பட்டிருந்த நீர்மின்சார உற்பத்தித் திறன் இழப்பு காரணமாக அல்ல, மாறாக நாட்டில் வீடுகளில் நிறுவப்பட்ட சோலார் பேனல்களிலிருந்து தேசிய மின்கட்டமைப்பில் பெரிய அளவில் மின்சாரம் சேர்க்கப்பட்டதன் காரணமாக. சராசரியாக ஒரு நாளைக்கு 2,300 மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகிறது.

பாணந்துறை மின்சார துணை மின்நிலையத்தால் அதைக் கையாள முடியவில்லை, மேலும் குரங்கு மோதியதால் முழு மின்சார அமைப்பின் சமநிலையும் பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் தேங்காய் தட்டுப்பாட்டுக்கும் குரங்குகள் மீதே குற்றஞ்சாட்டப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை (09) செயலிழந்த நுரைச்சோலை மின் நிலையம் செயல்படும் வரை ஒரு நாளைக்குக் குறைந்தது அரை மணி நேரம் மின்வெட்டு இருக்கும். மற்றொன்று, சூரியனால் முழு நாட்டிற்கும் மின்சாரம் வழங்க முடியும் என்ற முடிவு சவால் செய்யப்படுகிறது. சூரிய சக்தி பேனல்கள் மூலம் மின்சாரம் வழங்குவது நம் நாட்டிற்குப் பொருளாதார ரீதியாக மிகவும் இலாபகரமானது என்பது இன்னும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

இருப்பினும், ஞாயிற்றுக்கிழமை (09) ஏற்பட்ட மின்தடை மீண்டும் நிகழாமல் தடுக்க தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செய்ய வேண்டிய பணியும் பொறுப்பும் சிறியதல்ல. மின் பொறியாளர்கள் உட்பட துறையில் உள்ள அனைவரும் இந்த முயற்சிக்கு அவசரமாகப் பங்களிக்க வேண்டும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்



www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

ஒவ்வொருவருக்கும் நோய் வருவதும் அது பின்னர் குணமடைவதும் சாதாரணமானது. சிலநேரங்களில் கடுமையான நோய்களும் தாக்கிவிடுவதுண்டு. அப்பொழுது குடும்பத்தினர் வழிபாடுகளைச் செய்வார்கள். இதனால், நோய் குணமாகியவுடன் அது இறைவன் செயலாகும் என நிம்மதிப் பெருமூச்சு விடுவதுண்டு.

எனவே, மாறிமாறி வரும் துன்பங்களைக் கண்டு, அதீதமாகக் கவலைப்படல், தேகத்தை ஆரோக்கியமற்றதாக மாற்றிவிடும்.

கடவுள் மனிதர்களைத் தொடர்ந்தும் துன்பப்படுத்துவதில்லை. இறையை நம்புங்கள்! அதன் மாற்றங்கள், உடல்நிலையின் ஆரோக்கியத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும். நோய்கள் வருவது சாதாரணமானது ஆகையால், அவைகளை மாற்றுவதற்கும் வழியுண்டு. மக்கள் யாவரும் இயற்கையுடன் பயணிக்கின்றார்கள். நோய்கள் வந்தால், கண்டபடி நெஞ்சத்தில் கற்பனைகளை வளர்த்தலாகாது. அச்சம், சந்தேகம், கற்பனை என்பன பிறரது வதந்திகளால்தான் பெரும்பாலும் உருவாகின்றன. இதனால் மக்கள் அதிகளவில் பாதிப்புகளுக்கு உட்படுகின்றார்கள். நல்லதை நினைக்க வேண்டும். கவலைகளைக் கண்டபடி விலைக்கு வாங்கலாகாது. வாழ்க்கை, வெறுப்புகளுக்குள்ளும் குழப்பங்களுக்குள்ளும் உள்ளது என எண்ணலாகாது. என்றும் சுகதேகியாக, சந்தோஷமாக அமைதி நிலையில் வாழ்வோம் என நம்பிக்கை கொள்ளவும்..

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# எதிர்க்கட்சிகள் ஊழலை ஆதரிக்கின்றனவா?



எம்.எஸ்.எம்.ஐயூப்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அரசாங்கம் வழங்கியிருக்கும் உத்தியோகபூர்வ இல்லம் பெரும் சர்ச்சையில் சிக்கியிருக்கிறது. அவர் வீட்டிலிருந்து வெளியேற வேண்டும் அல்லது அதற்காக மாதாந்தம் 46 இலட்சம் ரூபா வாடகை செலுத்த வேண்டும் என்று அரசாங்கம் கூறுவதே அதற்குக் காரணமாகும்.

ஓய்வு பெற்ற அரசியல்வாதிகளை அரசாங்கம் பராமரிப்பதில்லை என்பதே ஆளும் தேசிய மக்கள் சக்தியின் கொள்கையாகும். அது நாளை அக்கட்சியின் தலைவர்கள் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றாலும் அமுலாகும் என்றே அக்கட்சியினர் கூறுகின்றனர்.

ஆயினும், இப்போதைக்கு அக்கொள்கையை அவ்வாறே அமுலாக்க அரசாங்கம் முன்வரவில்லை போலும். எனவே, தற்போதைய சட்டப்படி ஓய்வு பெற்ற முன்னாள் ஜனாதிபதிகளுக்குப் பொருத்தமான ஒரு வீடு அல்லது அவரது சம்பளத்தில் மூன்றில் ஒரு பகுதிக்குச் சமமான ஒரு தொகை வீட்டு வாடகையாக வழங்குவதாகவே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கூறியிருக்கிறார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு கொழும்பு-விஜயராம வீதியில் தான் இந்த வீடு வழங்கப்பட்டுள்ளது. அவர் பொதுப் பணத்தில் 47 கோடி ரூபாய் செலவில் அருகிலிருந்த மேலும் இரண்டு அரச விடுதிகளையும் அதனுடன் இணைத்துக் கொண்டுள்ளார். எனவே, தற்போது அவ்வீட்டின் பரப்பளவு 30,500 சதுர அடியாகும் என்றும் அரசாங்கம் கூறுகிறது.

ஒரு ஏக்கர் அரச காணியில் அமைந்துள்ள இந்த வீட்டின் பெறுமதி மட்டும் 350 கோடி ரூபாய் என மதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது. காணி இன்னமும் மதிப்பிடப்படவில்லை என்றே கூறப்படுகிறது. அதனை வாடகைக்கு விடுவதாக இருந்தால் மாத வாடகை 46 இலட்சம் ரூபாவாக வேண்டும் என்றும் அத்திணைக்களம் கூறியுள்ளது.

இந்த விடயத்தில் மக்கள் எடுக்கும் நிலைப்பாடு தமது உரிமையைப் பற்றி அவர்களுக்கு இருக்கும் அறிவின் அளவை காட்டுகிறது. ஓய்வு பெற்ற ஜனாதிபதி ஒருவருக்குச் சொந்த வீடு இருந்தாலும், அவருக்கு அரசாங்கம் வீடொன்றை வழங்க வேண்டுமா? ஆம் என்றால், அதன் பெறுமதி எவ்வளவாக இருக்க வேண்டும்? அதன் பெறுமதி பல நூறு கோடி ரூபாவாக இருந்தாலும், அவர் மேலும், ஓரிரு வீடுகளை அவ்வீட்டோடு இணைத்துக்கொள்வதை அனுமதிக்க முடியுமா? இவை அனைத்துக்கும் ஆம் என்று பதிலளிப்பதாயின், அது எமது அடிமை மனப்பான்மையையே காட்டுகிறது.

மஹிந்த ராஜபக்ஷ புலிகளுக்கு எதிராகப் போரிட்டு வென்றவர் என்றும் அவரது நடவடிக்கையினாலேயே இன்று நாம் அச்சமின்றி வீதியில் இறங்கிச் செல்கிறோம் என்றும், எனவே அவருக்கு அவ்வாறானதோர் வீட்டை வழங்குவதில் தவறில்லை என்றும் சிலர் கூறுகின்றனர். இது என்ன சட்டம்? என்ன நீதி?

மஹிந்தவின் காலத்தில் தான் போர் முடிவடைந்தது என்பது உண்மை தான். ஆனால், அந்த போர் வெற்றிக்காக மஹிந்த எடுத்த ஒரு முடிவையாவது எவராலும் கூற முடியுமா? போர் வெற்றிக்கான சகல நடவடிக்கைகளையும் சகல உத்திகளையும் போர் தந்திரங்களையும் வகுத்தவர், அக்காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவே.

அத்தோடு, 2002ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்படிக்கை கடலில் இல்லாமல் தரையில் மட்டும் அமுலாகும் படியே தயாரிக்கப்பட்டு இருந்தது. இதனால் போர் நிறுத்த உடன்படிக்கை அமுலிலிருந்த காலத்தில் கடற்படையினர் புலிகளின் 10 ஆயுதக் கப்பல்களை அழித்து விட்டனர். எனவே, 2007ஆம் முதல் வெளிநாடுகளிலிருந்து ஒரு பனடோல் வில்லையாவது கொண்டு வர முடியாது போய்விட்டது என்று அக்காலத்தில் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கிய குமரன் பத்மநாதன் (கே.பி) டெய்லி மிரர் பத்திரியுடன் நடத்திய நேர்காணல் ஒன்றில் கூறியிருந்தார்.

எனவே, போர் வெற்றி ஒரு பெருமை என்றால், அதற்கு மஹிந்தவை விட பொன்சேகாவுக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் உரிமை கூற முடியும். போர் வெற்றியின் மொத்தப் பெருமையும் மஹிந்தவுக்கே உரியது என்று வைத்துக்கொண்டாலும், அதற்காக பொதுப் பணத்தில் அவரை பராமரிக்க வேண்டுமா? அது சட்டமா? அது பதவியில் யார் இருந்தாலும் அவரது பொறுப்பாகும்.

போர் வெற்றிக்காக பொதுப் பணத்தில் சன்மானம் வழங்க வேண்டும் என்றால், நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்களுக்கு என்ன செய்ய வேண்டும்? மஹிந்த, கோட்டாபய, பசில் ஆகிய மூன்று சகோதரர்கள் உட்பட சிலரே அதற்குப் பொறுப்பாளர்கள் என்று உயர் நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியிருக்கிறது. எனவே, அரசியல்வாதிகளை பொதுப் பணத்தில் பராமரிக்க வேண்டும் என்பது ஊழலுக்கே இட்டுச்செல்கிறது.

இப்போது மஹிந்தவுக்கு அந்த வீட்டை வழங்க வேண்டும் என்று ஏனைய எதிர்க்கட்சிகளும் கூறத் தொடங்கியுள்ளன. எவ்வாறாயினும்,அரசாங்கத்தை அசௌகரியத்துக்கு உள்ளாக்க வேண்டும் என்பதற்காகவே அவர்கள் அவ்வாறு கூறுகிறார்கள். ஆனால், அதன் மூலம் அவர்கள் ஊழல் பேர்வழிகளைப் பாதுகாக்கிறார்கள்.

மஹிந்தவின் இரண்டாவது மகன் யோஷித்த, மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் இரத்மலானையில் பல கோடி ரூபாய் பெறுமதியான காணியொன்றை விலைக்கு வாங்கியிருந்தார். 2015ஆம் ஆண்டு, நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த போது, பொலிஸார் அவருக்கு அந்த காணியை விலைக்கு வாங்கப் பணம் எங்கிருந்து கிடைத்தது என்று விசாரணை ஆரம்பித்தது. தமது பாட்டியே தமக்குப் பணம் வழங்கினார் என்று அவர் பொலிஸாரிடம் கூறினார். பொலிஸார் பாட்டியிடம் பணம் எங்கிருந்து வந்தது என்று விசாரித்த போது, தெரியாத ஒரு நபர் தமக்கு மாணிக்கக்கல் பொதியொன்றை வழங்கியதாக அவர் கூறியிருந்தார்.

இப்போது, அந்த காணிக்கு உரிமையாளர் இல்லாத நிலையில், உருவாகியிருப்பதாகக் கூறப்படுகிறது. இதே போன்றதோர் சம்பவம் மல்வானையிலும் இடம்பெற்றது. பசில் ராஜபக்ஷ மல்வானையில் 16 ஏக்கர் காணியில் பெரியதோர் வீட்டைக் கட்டினார். அதற்குப் பணம் எங்கிருந்த வந்தது என்று நல்லாட்சி காலத்தில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. அப்போது பசில், அந்த வீட்டுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று கூறி விட்டார்.

கதிர்காமத்திலும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியொன்றில் அவ்வாறானதோர் வீடு கைவிடப்பட்டுள்ளது. அதற்கான மின்சாரம் ஜீ.ராஜபக்ஷ என்ற பெயரிலேயே வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கோட்டாபயவின் காலத்திலும் ரணில் விக்ரமசிங்கவின் காலத்திலும் இவை தொடர்பான வழக்குகள் கிடப்பில் போடப்பட்டு இருந்தது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்த போது பொலிஸார் மீண்டும் அந்த வழக்குகளை விசாரணையை ஆரம்பித்தனர். இப்போது, பலர் இது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அரசியல் பழிவாங்கல் என்று கூறுகின்றனர். விந்தை என்னவென்றால், இந்த வழக்குகளை ஆரம்பித்த நல்லாட்சி அரசாங்கத்தின் தலைவர்களும் அவ்வாறு கூறுவதேயாகும்.

ஊழலைப் பற்றிப் பேசுவதை விட அரசாங்கம் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் பலர் வாதிடுகின்றர். அரசாங்கம் முன்னுரிமைப் பட்டியல் ஒன்றைத் தயாரித்துக் கடமையாற்றுவதாக இருந்தால் இந்த வாதம் சரியானதேயாகும். ஆனால் நடைமுறையில் அவ்வாறு செய்ய முடியாது.

ஊழலை முறியடிப்பதற்கு பொலிஸாரும் இலஞ்ச ஆணைக்குழு போன்ற நிறுவனங்களும் இருக்கின்றன. வாழ்க்கைச் செலவைக் குறைக்க வர்த்தக அமைச்சு நிதி அமைச்சு போன்ற நிறுவனங்கள் இருக்கிறன. நிதி அமைச்சு வாழ்க்கை செலவு பிரச்சினை தீர்த்ததன் பின்னரே பொலிஸார் ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அடிப்படையில், முன்னுரிமை பட்டியல் தயாரிக்க முடியாது. அந்தந்த நிறுவனம் தத்தமது பணியைச் செய்ய வேண்டும். அப்போது சிலவேலை பொது மக்களுக்கு முக்கியமானது ஆரம்பத்தில் நடைபெறாதிருக்கலாம்.

அரகலய என்று பொதுவாக அழைக்கப்படும் 2022ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுமக்கள் எதிர்ப்பு இயக்கத்தின் போது, அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் காலிமுகத்திடலில் கூடாரமிட்டு இருந்த ஆர்ப்பாட்டமாகக் காரர்களைத் தாக்கி விரட்டினர். இதன் காரணமாக நாடெங்கிலும் அப்போதைய ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வன்முறைகள் வெடித்தன. பல எம்.பிக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

இதை அனுமதிக்க முடியாது தான். ஆயினும், இந்த எம்பிக்கள் இதையும் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டுள்ளனர். அவர்கள் தமது அரச அதிகாரத்தைப் பயன்படுத்தித் தாக்கப்பட்ட தமது வீடுகளுக்காகப் பெருமளவில் நட்டஈடு பெற்றுக்கொண்டுள்ளனர். சில வீடுகளுக்கு 9 கோடி ரூபாவுக்கு மேல் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ நட்டஈடு பெற்ற எம்.பிக்களின் பெயர் பட்டியலை பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

ஒருவர் அவ்வாறு 9 கோடி ரூபாய் நட்டஈடு பெற்றிருந்தால், அதன் அர்த்தம் அவரது வீட்டின் பெறுமதி 9 கோடி ரூபாவுக்கு அதிகமாகும் என்பதாகும். அதனை அவர்கள் தமது சொத்து விவர அறிக்கையில் தெரித்துள்ளார்களா? என்பதே இங்கு எழும் கேள்வியாகும்.

இந்த நட்டஈடு பெற்றவர்களின் பட்டியலை வெளியிட்டதையும் சில எதிர்க்கட்சிகள் குறை கூறுகின்றன. அதாவது, ஊழலை வெளியிடக் கூடாது என்றே அவர்கள் கூறுகின்றனர். இது ஊழல் பேர்வழிகளைப் பாதுகாக்கும் முயற்சியாகவே கருத வேண்டியுள்ளது.

எதிர்க்கட்சிகளின் இந்தப் போக்கை எவ்வாறு விவரிக்கலாம்? அரசாங்கத்தை விமர்சிக்க எத்தனையோ விடயங்கள் இருக்க, அரசாங்கம் செய்யும் அத்தனையும் எதிர்ப்பதன் மூலம் மக்களை வென்றெடுக்க முடியுமா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஓரிரு மாதங்களில் வரப்போரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்பதை அவர்கள் கருத்திற்கொள்ளவில்லை போலும்.

## கடிதங்கள்

### பல வருட பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வேண்டும்



ஹட்டன் மாவட்ட நீதிமன்றம் , பாடசாலை மற்றும் வலயக் கல்வி அலுவலகத்திற்குச் செல்லும் வீதியின் ஓரத்தில் குப்பைகள் கொட்டப்படுவதால் குறித்த வீதியூடாக பயணிக்கும் மாணவர்கள் உட்பட மக்கள், கடும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ், ஹட்டன் நகரில் சில நாட்களுக்கு முன்பு துப்புரவு திட்டம் செயல்படுத்தப்பட்டாலும், முக்கிய அரசு நிறுவனங்கள் மற்றும் பாடசாலைக்கு அருகில் இவ்வாறு மக்காத திடக்கழிவுகளைக் கொட்டுவதன் மூலம் கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுத்துவதாக நகரவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஹட்டன் நகரில் பல வருடங்களாக நீடித்து வரும் இந்த பிரச்சினைக்கு உடனடி மற்றும் நிரந்தர தீர்வை வழங்குமாறு நகரவாசிகளும், அப்பகுதி மக்களும் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

# போக்குவதரத்து அசௌளகரியங்களை தவிர்ப்போம்



சசிரேகா சிவப்பிரகாசம்
(SLTS) BA (TAMILOGY)
MA (TAMIL[R])
Dip. IN. TAMIL
DIP.IN.WRITING (R)

வாழ்வில் போக்குவரத்து இன்றியமையாத இடத்தை பெறுகின்றது. நாம் அன்றாடம் எமது சேவைகள், தேவைகள் நிமித்தமாகப் போக்குவரத்தினை மேற்கொள்கின்றோம். பொது போக்குவரத்து சாதனங்கள் பெரிதும் எமக்கு உதவுகின்றன. ஆனாலும், பல்வேறு அசௌளகரியங்களையும் விளைவித்து விடுகின்றன. சமீபகாலமாக விபத்துக்கள் அடிக்கடி நிகழ்ந்ததாக அறிகின்றோம். விபத்துக்களுடன் ஆபத்துக்களும் கவலைக்கிடமான சம்பவங்களும் போக்குவரத்து சந்தர்ப்பங்களில் இடம்பெறத் தான் செய்கின்றன.

போக்குவரத்திற்குப் பொருந்தாத சாதனங்களை அல்லது வாகனங்களைப் பயன்படுத்துவது எந்த வகையிலும் விபத்தினை ஏற்படுத்தி விடுகின்றன. பழைய வாகனங்களைப் புதுப்பித்து பாவனைக்கு உட்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டிய விடயமாகுமாம். அத்துடன், தரமற்றதும், விலை குறைந்ததும் என தெரிந்தும் உதிரிப்பாகங்களைப் பொருத்தி பிரயாணம் செய்வதையும் தவிர்த்தல் வேண்டும். அதே போல, போக்குவரத்தின்போது, கடைப்பிடிக்க வேண்டிய சட்டதிட்டங்களைப் பாதசாரிகளும் சாரதிகளும் கடைப்பிடிக்கத் தவறும் போது, பின் விளைவுகளைச் சந்திக்கின்றனர்.

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளைச் செலுத்துவது சட்டத்தை மீறும் செயலாகும். எனினும், இதில் பாதிக்கப்படுவது நாம் தான் என்பதைப் புரிந்து செயற்படுதல் வேண்டும். இன்றைய நவீன உலகில் எல்லாமே நவீன மயப்படுத்தப்பட்டது தான் காணப்படுகின்றது. அதி நவீன கார்கள், மோட்டார் சைக்கிள்களை உபயோகிப்பது மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து விட்டது என்பதை உணருகின்றோம். ஆனாலும், 'ஸ்டைல்' என்ற பெயரில் வாகனத்தை வேகமாகச் செலுத்துவது இன்றைய காலத்தில் வழக்கமாகி இருக்கின்றது. ஏனைய வாகனங்களைக் கண்டதும் போட்டியாக நடத்தி முன் சென்று ஓட்ட போட்டியாக நடத்தி விடுக்காமல் இங்கே பாதுகாப்பு என்பது இரண்டாம் படியாகக் கருதப்படுகின்றது.

இறுதியில் பாதுகாப்பு இல்லாமல் போகின்றது. இன்றைய பேருந்துகளிலும் தனிப்பட்ட வாகனங்களிலும் பாடல்கள் காதுகளைக் கிழிக்கும் அளவிற்கு ஒலிக்கச் செய்கிறார்கள். எதிர் எதிரே வரும் வாகனங்களின் சமிக்ஞைகள், ஒலிகள் என்பவற்றை விபத்துக்கள் தோன்றக்கூடிய சந்தர்ப்பங்கள் எழலாம். சில பேருந்துகளில் பிரயாணிகள் பாடல்களில் ஒலிகளைக் குறைக்கும்படி சண்டையிட்டு முரண்பாடு ஏற்பட வழியாக அமைகின்றது.

ஒலிகளை தமக்கும் பிறர்க்கும் சிக்கல்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். சமகாலத்தில் தொலைபேசிகள் சிக்கலாக அமைந்து விடுகின்றன. செல்பி மோகத்தால் அதிக உயிர் ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. ஓடும் தண்டவாளத்தில் நின்றும் நடுவீதியில் நின்றும் செல்பி எடுப்பதில் என்ன தான் கிடைக்கப் போகின்றது. அறிவு ரீதியாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டியது எமது கடைமையாகக் கருதப்படுகின்றது. போக்குவரத்தின் போது தொலைபேசி பாவனையைக் குறைத்துக்கொள்வது சிறந்தொரு செயலாகும். தொலைபேசியை காதில் வைத்துக்கொண்டு வீதியில் நடந்து செல்வதும் கடைகளிலும் போய் பொருட்களைக் கொள்வனவு செய்யாது கதைத்துத் திரிவதும் நமக்கு நாமே ஆபத்தினை ஏற்படுத்தும் செயலாகும். அதே போல வாகனங்களைச் செலுத்தும் போது தொலைபேசி பாவனையை குறைத்துக்கொள்வது சிறந்தது. வாகணங்களை தமக்கும் ஏனையோருக்கும் இடைஞ்சல் ஏற்படாதவாறு செலுத்துதல் வேண்டும்.

பொது போக்குவரத்து சாதனங்களில் குறிப்பாகப் பண்டிகை காலங்களில் மக்களை அள்ளி அடைத்துக்கொண்டு பிரயாணம் செய்பவர்கள் மூச்சு விடுவது கூட முடியாமல் திணறிக்கொண்டும், நின்று கொண்டும் பயணிப்பார்கள். கடைசியில் மயக்கம் வராத குறையாக வீடு போய்ச் சேர்வார்கள். சன நெரிசலில் நின்று கொண்டு பயணிப்பது சுலபமான காரியமா? ஏன் இந்த நிலையைப் புரிந்து கொள்ளத் தவறுகிறார்கள். குறித்த வாகனங்களின் கொள்ளளவிற்கு ஏற்ப மக்களை ஏற்றிச் சென்றால் யாருக்குமே

பிரச்சனைகள் இல்லை. மக்களும் இதனை அறிந்து செயற்பட வேண்டும். அள்ளி அடைத்துக்கொண்டு சென்று அல்லல் பட வேண்டுமா? அடுத்த வாகனங்களில் பிரயாணம் செய்யலாமே. அவசர அவசரமாக வாகனங்களிலிருந்து இறங்குபவர்கள் பல மணி நேரம் பிரயாணம் செய்து விட்டு இறங்குவதற்கு ஏனோ? தெரியவில்லை அத்தனை அவசரம் . எதிரேயும் முன்னேயும் வாகனங்கள் வரலாம் பொறுமையுடன் இறங்கலாம். அவசரமாக இறங்கித் தடுக்கி விழுந்து ஆபத்துக்களை விலை கொடுத்து வாங்கி விடுகிறார்கள். வாகனத்தை செலுத்துபவர்களாக இருக்கட்டம், பயணிப்பாபவர்களாக இருக்கட்டும் அவசரத்தை விடுத்து கொஞ்சம் நிதானத்துடன் நடந்து கொள்வதே புத்திசாலித்தனமான விடயமாகும். பெண்களும் பல்வேறு அளவிலான இடைஞ்சல்களை எதிர் கொள்கிறார்கள்.

இவர்களை சன நெரிசல் என்ற பெயரில் இடிப்பதும், உரசுவதும் வழக்கமாகி விட்டது என்று தான் கூற வேண்டும். மது போதையில் பொது போக்குவரத்தில் செல்வதும் பெரிதும் அசளகரியங்களை ஏற்படுத்துபவர்களும் இருக்கின்றனர். பெற்றோர்கள் தமது பெண் பிள்ளைகளை வகுப்புக்கு அல்லது தொழில்களுக்கு அனுப்பி விட்டு வீடு வந்து சேறும் வரை வயிற்றில் நெருப்பைச் சுமந்து கொண்டு தான் இருக்கின்றார்கள்.

உண்மையில் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன் அவர்களை நல்லமுறையில் பிரயாணம் செய்வதற்குரிய வசதிகளை அளிப்பது அவசியமாகும். அதே போல, போக்குவரத்தின் போது, எமது உடைமைகளைப் பாதுகாக்க வேண்டும். ஒரு சிலர் தமது உடைமைகளைத் தொலைத்து விட்டுத் தேடி வருவார்கள். குடைகள். பைகள் இவற்றில் பிரதானமானவை ஆகும். அத்துடன், அவசியமான ஆவணங்களையும் தங்க நகைகளையும் இவ்விதம் தொலைத்துவிடுபவர்கள் உண்டு. பயணத்தின் போது தூக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டே பயணிப்பது சரியா?மற்றவர்கள் மீது தூங்கி விழுந்து கொண்டு செண்று விடுவார்கள்.

இறுதியில் இறங்கும் இடத்தையும் விட்டு விட்டு கண் விழித்த இடத்தில் இறங்கி செலவு செய்து கொண்டு மீண்டும் வந்து சேர வேண்டிய இடத்திற்கு வரவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டு விடும். கொள்ளையர்களிடமிருந்து பணப்பைகளை இழந்து விடாது பார்த்துக் கொள்ள வேண்டும். அறிமுகம் இல்லாத நபர்களிடம் பழகுவதும் கதைப்பதும் சற்று நிதானத்துடன் தான் செயற்பட வேண்டும். பயணம் செய்யும்போது, தன் பண்டங்களைச் சாப்பிட்டுக் கொண்டு செல்பவர்கள் கழிவுகளை ஜன்னலில் வெளியே வீசுவதும் பேருந்தின் அல்லது புகையிரதங்களின் உள்ளே விட்டுச் செல்வதும் முற்றிலும் தவிர்க்கப்படல் வேண்டும். அதே போல, சத்தமிட்டுக்கொண்டு பிரயாணம் செய்வதும் முற்றிலும் தவிர்க்கப்படல் வேண்டும். ஆபத்துக்களையும் விபத்துக்களையும் தவிர்ப்பதற்குப் பாதசாரிகளுக்கும் பிரயாணம் செய்பவர்களுக்கும் செலுத்துபவர்களுக்கும் உள்ள பொறுப்புகளும் கடைமைகளும் ஆகும். அதே போல, வாகனங்களை அலங்காரப்படுத்தும் போதும் கண்ணாடிகளைப் பொருத்தம் போதும் சட்டதிட்டங்களைப் பேணுதல் வேண்டும்.



# இளம் விவசாய விஞ்ஞானிகள் கௌரவிப்பு







யாஃவட்டு இந்துவின் இளம் விவசாய விஞ்ஞானிகள் கௌரவிக்கும் நிகழ்வானது பாடசாலை முதல்வர் கு.லங்காபிரதீபன் தலைமையில் னுசு.ரட்ணம்நித்தியானந்தனின் அனுசரணையுடன் யாஃவட்டு இந்துக் கல்லூரியில் புதன்கிழமை (05) நடைபெற்றது.

அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட இளம் விவசாய விஞ்ஞானப்போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்ற ஐந்து மாணவர்கள் இந்த நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டனர்.

இதில் பிரதம விருந்தினராக கலாநிதி ரட்ணம் நித்தியானந்தனும் (Ratnam Founder U.K), சிறப்பு விருந்தினர்களாக, ளு.ரமேஸ்(Agricuture Instructor, Office of the Deputy Director of Agriculture) P.அருந்தவம்(In service Advisor Zonal Education Office Valikamam) யு.கோகுலராஜன் (Manager Jaffna Field Study Centre) ஆகியோரும் கலந்துகொண்டனர். அத்தோடு, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வினை தலைமை தாங்கி நடாத்திய பாடசாலை அதிபர், இந்த நிகழ்விற்கு அனுசரணை வழங்கிய DR.நித்தியானந்தனுக்கு நன்றி கூறியதோடு வெற்றி பெற்ற மாணவர்களையும் வழிப்படுத்திய ஆசிரியரையும் தேவையான வழிகாட்டல்களை வழங்கிய சிறப்பு விருந்தினர்களையும் நன்றியுடன் பாராட்டினார்.

அத்துடன், இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் உரையாற்றும் போது, இன்று மாணவர்கள் பல சவால்களின் மத்தியில் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது எனவும் இம்மாணவர்கள் அவற்றையும் தாண்டி சாதனையைப் புரிந்துள்ளார்கள் எனவும் பாராட்டியதோடு அவர்களை வழிப்படுத்திய ஆசிரியரையும் ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர்களையும் பாராட்டினர்.

சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றும் போது யாழ் மாவட்டத்தில் அதிகூடிய மாணவர்கள் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட பாடசாலை யாஃவட்டு இந்துக் கல்லூரியாகும் எனவும் அதற்கு ஆசிரியரதும் மாணவர்களதும் அயராத உழைப்பே காரணம் எனவும் கூறி இனிவரும் காலங்களிலும் இவர்கள் பல வெற்றிகளைப் பெற வேண்டும் எனவும் வாழ்த்தினர்.

# மாவட்ட பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள் பாராட்டு விழா

**எஸ்.அஷ்ரப்கான்**

சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் (IHRM) ஏற்பாட்டில் தேசிய ரீதியில் மாவட்ட பணிப்பாளர்கள், அங்கத்தவர்களுக்கான அடையாள அட்டை மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு குறித்த அமைப்பின் தேசியத் தலைவர் துவான் ரிஸ்வான் காசீம் தலைமையில் கொழும்பு செரண்டிப் கிரேன்ட் மண்டபத்தில் சனிக்கிழமை (08) இடம் பெற்றது.

இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கௌரவ அதிதிகளாக பொலிஸ் துறை, பாதுகாப்புத் துறை உயர் அதிகாரிகள், சர்வமத தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவின் போது அம்பாறை, கொழும்பு, கம்பஹா, கண்டி உட்பட பல மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.









குவாத்தமாலா

பேருந்து விபத்தில்

# 51 பேர் பலி

மத்திய அமெரிக்காவில் உள்ள குவாத்தமாலா நாட்டின் புறநகர்ப் பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 51 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த பேருந்து நெடுஞ்சாலை பாலத்திலிருந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

மேலும், உயிர் பிழைத்தவர்கள் பலர் பஸ்ஸில் சிக்கிக்கொண்டதாக, அந்நாட்டின் தீயணைப்புத் துறையின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

விபத்துக்குள்ளான பேருந்து பாலத்திலிருந்து கவிழ்ந்து கழிவுநீரால் மாசுபட்ட ஆற்றில் விழுந்துள்ளது எனவும் 70க்கும் மேற்பட்டவர்களை ஏற்றிச் சென்ற பஸ் இடிபாடுகளில் இருந்து 51 பேரின் உடல்கள்



மீட்கப்பட்டதாகவும், மீட்புக்குழு தெரிவித்துள்ளது.

விபத்து குறித்து குவாத்தமாலா ஜனாதிபதி பெர்னார்டோ அரேவலோ, மூன்று நாட்கள் தேசியத் துக்கத்தை அறிவித்து, மீட்பு முயற்சிகளுக்கு உதவ நாட்டின் இராணுவம் மற்றும் பேரிடர் நிறுவனத்தை நியமித்துள்ளார்.

மேலும், "இதயத்தை உடைக்கும் செய்திகளைக் கேட்டு விழித்தெழுந்த பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுடன் நாங்கள் இருக்கிறோம். அவர்களின் வலி எனது வலி," என்றும், அரேவலோ குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா

பணய கைதிகளை விடுவிக்க

# காலக்கெடு

காசாவில் பிடித்து வைக்கப்பட்டு உள்ள பணய கைதிகள் அனைவரும், வருகிற சனிக்கிழமை (15) மதியத்துக்குள் விடுதலை செய்யப்பட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஓவல் அலுவலகத்தில், நிருபர்களிடம் பேசியபோதே, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்துரைத்த அவர்,

"காசாவில் பிடித்து வைக்கப்பட்டு உள்ள பணய கைதிகள் அனைவரும் வருகிற சனிக்கிழமை (15) மதியத்துக்குள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

அப்படி அவர்கள் விடுவிக்கப்படவில்லை என்றால், போர்நிறுத்த ஒப்பந்தத்தினை இரத்து செய்து விடுவேன்.

மேலும், காசாவில் இருந்து புலம்பெயர்ந்து வரும் அகதிகளை ஜோர்டான் மற்றும் எகிப்து நாடுகள் ஏற்று கொள்ள வேண்டும். அவர்கள் இதனை ஏற்கவில்லை என்றால், அந்நாடுகளுக்கான உதவியை நிறுத்தி வைக்க நேரிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.



பிரித்தானியா

குப்பையில் கிடந்த

## ஹெரி பாட்டர் புத்தகம் ஏலத்தில்

குப்பையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட "ஹெரி பாட்டர்" நாவலின் முதல் பதிப்பு புத்தகம், சுமார் ரூ.66 இலட்சத்துக்கு ஏலம் போய் உள்ளது.

இந்த ஏலம், கடந்த சனிக்கிழமை (8), இணையவழி ஊடாக நடைபெற்றது.

இந்த ஏலத்தை நடத்திய டேனியல் பியர்ஸ் என்பவர், உயிரிழந்த ஒருவரின் உடைமைகளுடன் இப்புத்தகத்தைக் கண்டெடுத்துள்ளார்.

500 புத்தகங்களே அச்சிடப்பட்டது என்றும் பொது நூலகங்களுக்கு விநியோகிக்கப்பட்ட 300 பிரதிகளில் ஒன்று இது என்றும் கூறப்படுகிறது.




மராட்டியம்

# மர்ம நோயால் 7 பேர் பலி




மராட்டியத்தில், ஜி.பி. எஸ். எனப்படும் மர்ம நோய்ப் பாதிப்புக்கு இலக்காகி, 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

மராட்டியத்தின் புனே நகரில், ஜி.பி.எஸ். எனப்படும் கில்லெயின்-பார்ரே சிண்ட்ரோம் எனப்படும் பாதிப்பு பரவலாகக் காணப்படுகிறது.

இது குறித்து மராட்டியச் சுகாதாரத் துறை வெளியிட்ட அறிக்கையில்,

"மொத்தம் 192 பேருக்குப் பாதிப்புக்கான சந்தேகத்தின் அடிப்படையில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில், இதுவரை 167 பேருக்குப் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

"இந்த மர்ம வியாதிக்கு 7 பேர் பலியாகியுள்ளனர். அவர்களில் ஒருவருக்கு இந்த ஜி.பி.எஸ். பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. மற்ற 6 பேரின் நிலையும் சந்தேக பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது.

"இந்நிலையில், 48 நோயாளிகள் அவசர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளனர். 21 பேருக்கு உயிர் காக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. 91 நோயாளிகள் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளனர்.

"மாசுபட்ட தண்ணீரால் இந்த மர்ம நோய், பாதிப்பு ஏற்படுத்தி நோயாளிகளைப் பலவீனப்படுத்துகிறது.

"இதனால், நரம்பு மண்டலம் பாதிக்கத் தொடங்கி, தசை பலவீனம் மற்றும் முடக்கம் போன்ற பல்வேறு அறிகுறிகளும் ஏற்படுகின்றன. இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன" என குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசம்

# கும்பமேளாவில் துறவறம் ஏற்ற 7,000 பெண்கள்



உத்தரப்பிரதேசத்தில் நடைபெறும் மகா கும்பமேளாவின் போது, சுமார் 7,000க்கும் மேற்பட்ட பெண்கள் சன்னியாச தீட்சை எடுத்துள்ளனர்.

கும்பமேளா நிகழ்வில் இதுவரை

40 கோடிக்கும் மேற்பட்டோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வழிபட்டுள்ளனர்.

மேலும் அங்குள்ள கும்பமேளா நிகழ்வின் போது ஏராளமான இளம் பெண்கள் துறவறம் மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக உத்தரப்பிரதேச அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இதுவரை 7,000க்கும் மேற்பட்ட பெண்கள் மகா கும்பமேளா விழாவில் திரிவேணி சங்கமத்தில் நீராடி சந்நியாச தீட்சை எடுத்துள்ளனர்."சந்நியாச தீட்சை எடுத்து துறவறம் மேற்கொண்ட பெண்கள் சனாதனத்துக்குச் சேவை செய்வதாக உறுதிமொழி எடுத்துள்ளனர். துறவறம் பூண்ட பெண்கள் பெரும்பாலானோர் உயர்கல்வி பயின்றவர்கள் ஆவர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான

# இலங்கைக் குழாமில் சமிந்து விக்ரமசிங்க இல்லை



அவுஸ்திரேலியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமில் சமிந்து விக்ரமசிங்க இடம்பெறவில்லை.

குழாம்: சரித் அசலங்க (அணித்தலைவர்), நிஷான் மதுஷ்க, நுவனிடு பெர்ணாண்டோ, அவிஷ்க பெர்ணாண்டோ, குசல் மென்டிஸ் (விக்கெட் காப்பாளர்), பதும் நிஸங்க, வனிது ஹசரங்க, ஜனித் லியனகே, கமிந்து மென்டிஸ், அசித பெர்ணாண்டோ, லஹிரு குமார, எஷான் மலிங்க, மொஹமட் ஷிராஸ், மகேஷ் தீக்ஷன, ஜெஃப்ரி வன்டர்சே, டுனித் வெல்லலாகே.

ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சியை

## கண்காட்சிப் போட்டியில் வென்ற இ.போ.ச அணி

■ எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவட்ட விளையாட்டு அரங்கில் வெள்ளிக்கிழமை (07) நடைபெற்ற ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சியுடனான கண்காட்சிப் போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் இ.போ.ச. அணி வென்றது.

இப்போட்டியின் சிறந்த வீரராக இ.போ.சவின் சந்தனவும், சிறந்த கோல் காப்பாளராக அதேயணியின் சுரங்கவும் தெரிவாகினர்.





ஒற்றை டெஸ்ட் போட்டியில்

## சிம்பாப்வேயை வென்ற அயர்லாந்து




புலவாயோவில் வியாழக்கிழமை (06) ஆரம்பித்து திங்கட்கிழமை (10) முடிவுக்கு வந்த சிம்பாப்வேக்கெதிரான ஒற்றை டெஸ்ட் போட்டியை அயர்லாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அயர்லாந்து

அயர்லாந்து: 260/10 (துடுப்பாட்டம்: அன்டி மக்பிரயன் ஆ.இ 90, மார்க் அடைர் 78, லொர்கன் டக்கர் 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிளஸிங்க் முஸர்பனி 7/58, றிச்சர்ட் நகரவா 2/65, ட்ரெவர் குவான்டு 1/53)

சிம்பாப்வே: 267/10 (துடுப்பாட்டம்: நிக் வெல்ச் 90, பிளஸிங்க் முஸர்பனி 47, வெஸ்லி மட்ஹெவெரே 26, தகுட்ஸ்வனஷே கைட்டானோ 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: பரி மக்கார்தி 4/75, அன்டி மக்பிரயன் 3/59, மார்க் அடைர் 2/56, மத்தியூ ஹம்ப்பிறைஸ் 1/38)

அயர்லாந்து: 298/10 (துடுப்பாட்டம்: அன்டி போல்பிரயன் 66, லொர்கன் டக்கர் 58, கேர்ட்டிஸ் கம்பர் 39, பீற்றர் மூர் 30 ஓட்டங்கள். பந்துவீச்சு: றிச்சர்ட் நகரவா 4/55, ட்ரெவர் குவான்டு 2/28, வெஸ்லி மட்ஹெவெரே 2/48, ஜொனதன் கம்பெல் 1/47, பிளஸிங்க் முஸர்பனி 1/70)

சிம்பாப்வே: 228/10 (வெ.இ: 292 ஓட்டங்கள்) (துடுப்பாட்டம்: வெஸ்லி மட்ஹெவெரே 84, பிரயன் பென்னிட் 45, ஜொனதன் கம்பெல் 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: மத்தியூ ஹம்பிரேய்ஸ் 6/57, பரி மக்கார்தி 2/22, மார்க் அடைர் 1/47)

போட்டியின் நாயகன்: அன்டி மக்பிரயன்

அவுஸ்திரேலியாவுக்கெதிரான

## இலங்கைக் குழாமில் சமிந்து விக்ரமசிங்க இல்லை

அவுஸ்திரேலியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமில் சமிந்து விக்ரமசிங்க இடம்பெறவில்லை. குழாம்: சரித் அசலங்க (அணித்தலைவர்), நிஷான் மதுஷ்க, நுவனிடு பெர்ணாண்டோ, அவிஷ்க பெர்ணாண்டோ, குசல் மென்டிஸ் (விக்கெட் காப்பாளர்), பதும் நிஸங்க, வனிது ஹசரங்க, ஜனித் லியனகே, கமிந்து மென்டிஸ், அசித பெர்ணாண்டோ, லஹிரு குமார, எஷான் மலிங்க, மொஹமட் ஷிராஸ், மகேஷ் தீக்ஷன, ஜெஃப்ரி வன்டர்சே, டுனித் வெல்லலாகே.

முத்தரப்புத் தொடர்:

## இறுதிப் போட்டியில் நியூசிலாந்து

பாகிஸ்தான், நியூசிலாந்து, தென்னாபிரிக்க அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு நியூசிலாந்து தகுதி பெற்றுள்ளது.

பாகிஸ்தானுடனான தமது முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த நியூசிலாந்து, லாகூரில் திங்கட்கிழமை (10) நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட தென்னாபிரிக்கா, ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்ட மத்தியூ பிரெட்ஸ்கே, வியான் முல்டரின் 64 (60), ஜேஸன் ஸ்மித்தின் 41 (51) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 304 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் மற் ஹென்றி, வில் ஓ'ருர்க் ஆகியோர் தலா 2, மிஷெல் பிறேஸ்வெல் ஒரு விகெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 305 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, கேன் வில்லியம்சனின் ஆட்டமிழக்காத 133 (113), டெவோன் கொன்வேயின் 97 (107) ஓட்டங்களோடு 48.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்ட செனுரன் முத்துசாமி 2, அறிமுகத்தை மேற்கொண்ட ஈதன் பொஷ் மற்றும் ஜூனியர் டலா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் நாயகனாக வில்லியம்சன் தெரிவானார்.

இந்நிலையில் கராச்சியில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள மூன்றாவது போட்டியில் இறுதிப் போட்டிக்குச் செல்லும் மற்றைய அணியைத் தெரிவு செய்வதற்காக பாகிஸ்தானும், தென்னாபிரிக்காவும் மோதவுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை 12, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.